உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰சூ { விக்கிரம—ஆவணி } மலர் ரு

க.	பொழிற்றொண்டர் கருத்துரைகள்	161
உ.	கங்கை கொண்ட சோழபுரத்துப் படமொன்று திரு. பெ. கோவிந்தராசர்	168
ங.	அறந்தாங்கி அரசு திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்	169
ச.	என் பெயர் பேதைச் சோழன் திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம், ஏ.	176
ரு.	சிலம்பின் முச்சுவை வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்	177
சூ.	மெய்ப்பாட் டியல் திரு. S. சோமசுந்தர பாரதியார் M.A., B.L.,	183
எ.	லகர வெழுத்து உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்	189
அ.	கம்பரும் உடல் வனப்பும் திரு. T. K. சிதம்பரநாத முதலியார்	196
கூ.	தமிழ்ச் செய்திகள்	200
௰.	நன்கொடைகள்	200
௰க.	சுவடி மதிப்பு	201

பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௬	விக்கிரம—ஆவணி	மலர் ரு

உ

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

வேண்டுகோள்.

தமிழ்ப் பொழில் ஆடித் திங்கள் மலரில், 'பொருளைக் காட்டிலும் தமிழ் மக்கள் தம் தாய்மொழியிடத்துக் கொள்ளும் அன்பினையும் நல்லெண்ணத்தினையுமே யாம் சிறப்பாக வேண்டுகின்றோம்.' என்று கூறினோம். அன்பும் நல்லெண்ணமும் உண்டாய பொழுது நம் தமிழ்ப் பணிக்கு வேண்டும் பொருள் தானே பெருகும் என்பது எம் கருத்து.

o o o o o o

நம் மக்களிடத்துத் தாய்மொழி யன்பும், தாய் மொழிக்கு நேர்ந்த பல வகைப்பட்ட இடையூறுகளையும் போராடிக் களைந்து, தாய் மொழியைச் சிறப்புறச் செய்யவேண்டுமென்ற நல்லெண்ணமும் பெருகி வருகின்றன வென்பதை, சென்ற சில ஆண்டுகளாக நாம் காணும் நிகழ்ச்சிகளும் கிளர்ச்சிகளும் நன்கு வெளிக் காட்டின. நம் மருமைச் செந் தமிழ்த் தூய் மொழிக்கு நேர்ந்த ஊறுகளைக் கண்டு நம் தமிழ் மக்கள் மனம் பொறுதவராய், எவ்வகை அரசியற் கருத்தினரும், ஒன்று கூடி; இடர்

களைந்து, தாயின் தூய்மையைக் காத்த ஒரு செயலே தமிழ் மக்கள் தம் தாய்மொழியிடத்துக் கொண்டுள்ள அன்பின் பெருக்கத்தையும் பற்றின் மிகுதியையும் காட்டப் போதியதாம்.

இடர் களைந்ததோ டமையாது, பின்னரும் இடர் நேரா வாறும், நம் தாய்மொழி மேன்மேலும் வளமுற்றுச் சிறக்கவும், தமிழ்ப் பெருமக்கள், அங்கங்கே தமிழ்க் கழகங்கள் நிறுவியும், திங்கட்டாள்கள் தோற்றியும், பழந் தமிழ்ச் சுவடிகளை வெளியிட்டும், செவ்விய முறையில் உரைநடை எழுதியும், தாயின் மேன்மை கருதிக் கொண்ட நல்லெண்ணத்தையும் புலப்படுத்தினர். தமிழ்மொழியைக் கற்கவும், தூய தமிழில் எழுதவும் தமிழ் மக்கள் விருப்புக் கொண்டிருக்கின்றனர். இவற்றினையெல்லாங் கண்டு, நம் சங்கம் பண்டு முதல் கொண்ட கொள்கையும் எடுத்த முயற்சியும் நிறைவுற்று வருதல் கருதி எமக் குண்டாம் மகிழ்ச்சிக்கு அளவு கூற வொண்ணாது. எம் முயற்சியைப் பின்னுந் தொடர்ந்து செலுத்துவோம்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

நம் செழுந் தமிழ்மொழியின் ஆக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் வழியாக யாம் இதுகாறும் முயன்று தொடங்கியிருக்கும் துறைகள் பல வென்பதை முன் மலரிற் குறிப்பிட்டோம். எம் முயற்சி இனிது பயன்பெறற் பொருட்டு எம் கடமைகள் பின்னும் பலவுள. நம் சங்கத்து வெள்ளி விழாவின் பொழுது நிறுவப்பெற்ற செந்தமிழ்க் கல்லூரிக்குப் போதிய முதற் பொருள் இன்மையின், சென்னைப் பல்கலைக் கழகத்தார் அதனை ஒப்ப மறுக்கின்றனர். மறுக்கின்றமையின், மாணவர்கள் வித்துவான் முதலிய தேர்வுகட்கு, அவர்களது இருபத்தைந் தாவ தாண்டு நிறைவதற்குள், போக முடியவில்லை. சங்கத்து ஆங்கிலக் கல்லூரியும் இன்னும் சீர்பெற வேண்டியிருக்கிறது. திக்கற்ற மாணவர் இல்லத்தை யாம் விரும்பும் சிறப்பு முறையில் நடத்த முடியவில்லை. ஏழை மக்களுக்கெல்லாம் பேருதவியாயிருக்கும் மருத்துவசாலையைப் பின்னும் விரிவாக்கவேண்டும். நமது நூல் நிலையம் இன்னும் வளரவேண்டும். சில ஆண்டுகளாக மூடப்பெற்றுள்ள படிப்பிடம் திறக்கப் பெறல்வேண்டும். நம் தமிழ்ப் பொழிலோ பரந்தகன்று, குளிர் தருக்கள் மிகுந்து

நிறைந்ததாய்த், தன்னை எவர் விரும்பி யடையினும் அவரவரும் விரும்பும் தக்க இடமுள்ளதாய்ச், செந்தமிழ்ப் பூந்தேன் சொரிவதாய்ப், பைந்தமிழ்த் தென்றல் வீசுவதாய், இன்றமிழ் மகிழ்ச்சி பயப்பதாய்த் தழைக்கவேண்டும்.

இந் நெறிகளி லெல்லாம் எம் கடமைகளைக் குறைவற நிறைவேற்றப் பெரும் பொருள் வேண்டும். இப் பெரும் பொருளைப் பெறவேண்டி நம் கருத்தினைப் பெரிதும் செலுத்துதல் இன்றியமையாத தாகின்றது.

௦ ௦ ௦ ௦ ௦ ௦

நம் தமிழ் நாடு செல்வத்தில் எந்நாட்டினும் குறைந்ததென்று நாம் ஒப்பமாட்டோம். உள்ள செல்வம் விளக்கம் பெறவில்லை யென்று வேண்டுமானால் சொல்லலாம். அன்பர் பலர் கருதுகிறபடி, வடநாட்டிற் போல நம் தமிழ் நாட்டில் செல்வம் விளக்கம் பெறுமைக்கும் நற்பய னுறுமைக்கும், தமிழ் மக்கள் தம் விரிந்த உள்ளத்தைச் சுருங்க வைத்த தொன்றே பொருட்டாகும். தன் னலத்தினும் பொது நலத்தினையே சிறந்ததாகக் கொண்டிருந்த தமிழ்மக்கள் இந் நற்குணத்தை நெகிழவிட்டு விட்டனர் என்றும் சொல்லலாம். ஊற்று நீர் போலச் செல்வம் பயன்படுத்தப் பயன்படுத்தத்தான் பெருகும் என்பதைத் தமிழ் மக்கள் நினைவிற் கொள்ளவேண்டும். நில்லாத செல்வத்தை நிலைக்க வைக்கக் கூடும் நன் னெறியினைத் தமிழ் மக்கள் சூழ்ந்து ஆயவேண்டும்.

௦ ௦ ௦ ௦ ௦ ௦

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல். —குறள் ௩௩௩.

தாம் பெற்ற செல்வத்தை வீணாக்காது நற் பயனுறச் செய்யும் தமிழ்மக்கட்கு நம் சங்கம் பெருந்துணை செய்யக்கூடும். 'ஈவார் மேல் நிற்கும் புகழ்' என்றபடி, தமிழ் மக்கள் தம் புகழை நிலை நாட்டிக் கொள்ளக் கூடும். பெற்ற பொருளை உற்ற

வழியில் நற்செலவு செய்யத் தெரியார் தமிழ் மக்கள் என்னும் இழி மொழியை அகற்றிக் கொள்ளக் கூடும். நற்றமிழ் மக்கள் உதவியால் எம் முயற்சியும் இனிது கைகூடும்.

௦ ௦ ௦ ௦ ௦ ௦

எம் குறிக்கோளை யடையப் பெரும்பொருள் தேவை. ஆகவின், யாம் ஒரு ஏற்பாட்டினை எண்ணித் துணிந்து அதனைத் தமிழ் மக்கட்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். இந்தப் போர் நெருக்கடியில் நம் ஆங்கில அரசுக்குப் பேருதவி செய்யவேண்டிய நிலையில், எம் திட்டத்தைத் தமிழ்மக்களுக்குத் தெரிவிக்கத் தயங்கினோம். எனினும், பின்னெண்ணத்தில், போருக்கு வேண்டும் உதவி செய்வதுடன், எம் திட்டத்தையும் நிறைவேற்றும் பொருளாற்றல் நம் மக்கட்கு மிகுதியும் உண்டென உணர்ந்தே எம் வேண்டுகோளைத் தமிழ்ப் பெருமக்களிடம் யாம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நமக்குப் பொருள் தேவை, நூற்றுக் கணக்கிலிருந்து, ஆயிரக் கணக்கிலிருந்து, பதினாயிரக் கணக்கிலிருந்து, நூறாயிரக் கணக்குக்கு வந்துவிட்டது. இப்பொழுது உடனே முதல் நூறாயிரம் வேண்டும். இதனை எமக்குக் கொடுக்க முதற் பெருந் தமிழ் மக்கள் நூற்றுவர் முன்வரவேண்டும். ஒவ்வொருவரும் ஓராயிரம் வெண்பொற்காசு தந்தருளல் வேண்டும். அருள்வார் எல்லாம் நம் **தமிழ்ப் பெருமன்றத்**தில் என்றென்றும் நிலைபெற்றிருக்கும் பேறு பெறுவர். இம் **முதல் வள்ளல்கள் நூற்றுவர்** வருகையை யாம் மிக மகிழ்வொடு எதிர்பார்த் திருக்கின்றோம். நல்லெண்ணம் குறையா நற்றமிழ் மக்கள், தாய்த் தமிழ் மொழிக்குத் தலையையும் கொடுக்க முன்வந்த **குமண வள்ளல்** வழிவந்த பெருந் தமிழ்மக்கள், புலவர் பாட்டே தம்பாடாகப் பாராட்டிய தமிழரசர் வழிவந்த வீரத் தமிழ் மக்கள், பாட்டுக் குவக்கும் பரமனடியா ராகிய அருட் டமிழ்மக்கள், பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல் அருள்பெற்ற தீந்தமிழ் மக்கள், தம் கடனாற்றித் தம்புகழ் நிறீஇத் தகு சிறப் புறுவார்களாக!

௦ ௦ ௦ ௦ ௦ ௦

நிலையாத செல்வத்தை நிலைக்கவைக்கும் வழியைத் தமிழர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று முன்னர்க் கூறினோம். இந்த வழியை நமக்குக் காட்டி வைத்திருக்கும் சீராளர் உளர். அவருள் ஒருவர் ஈட்டிய ஒண் பொருளைப் பறிகொடுக்காது நாட்டிற் காக்கிய பேராளர் பச்சையப்ப முதலியார்.

தமிழ் நாட்டுப் பல பெருங் கோயில்களிலும் கல்விக் கழகங்களிலும் பச்சையப்ப முதலியார் என்றும் நிலைத்த புகழுருக் கொண்டு விளங்குகிறார். சென்னபட்டினத்தில் கண்டவர் களிக்கக், கல்விக்கு முதற் களனாக விளங்கும் பெரியதொரு கலைமாடத்தில் அவர் புகழ் சிறப்பாக ஒளிர்கின்றது.

பச்சையப்பன் பெருமாளிகைகளைக் காணும் தமிழ் மகன் எவனும் நிலையாத செல்வத்தை நிலைக்கவைக்கும் உண்மைப் பேரறிவு பெறாமலிருக்க முடியாது. முதலியார் அறச்செயல்கள் நாளும் பெருகிப் பரந்து மிளிர்கின்றன.

பச்சையப்பன் பெருமாளிகைகளுள் புதியதொன்று விக்கிரம, ஆடி, உஅ ஆம் நாள் (12—8—40) திறக்கப் பெற்றது. இம் மாளிகைத் திறப்பு தமிழர்க்கோர் கண் திறப்பாயிற்று. மாளிகையைத் திறந்து வைக்கும்படி, பச்சையப்பர் அறக் காப்பாளர் தலைவர், மருத்துவப் பேரறிஞர், திரு. ஆ. இலக்குமணசாமி முதலியார் அவர்கள், மாட்சி மிக்க சென்னை மாகாணத் தலைவரை வேண்டிக்கொண்ட பொழுதில் ஓரிடத்துப் பின் வருமாறு கூறினார்:

> "இந்தக் கல்லூரியில் புதுவதாக ஏற்படுத்திய கலைப் பகுதிகளில், வித்துவான் வகுப்புக்களும் கீழைக் கலைத் தேர்ச்சி வகுப்புக்களும் சேர்ந்திருக்கின்றன. சென்னை மாகாணத்தில் தொகுக்கப் பெற்றவும் இணைக்கப்பெற்றவுமான கல்லூரிகளுக்குள் இவ்வகுப்புக்களை முதன் முதலாக ஏற்படுத்திய பெருமை யுடைமை எங்களுக்கே உரியதாயிற்று."

செந்தமிழ் மொழிச் சிறப்பு, பின்னுமொருபடி உயர்ந்தது. பச்சையப்பர் அறக் காப்பாளரையும், அவர்தம் தலைவர் திரு. இலக்குமணசாமி முதலியாரையும் யாம் பெரிதும் பாராட்டிக் கொண்டாடுகிறோம்.

சிறந்த தமிழ்ப் பேரறிஞர் திரு. ஈ. ந. தணிகாசல முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., விக்கிரம, ஆடி, ௧௯௨ (3—8—40), காலஞ்சென்ற செய்தி யறிந்து யாம் பெரிதும் வருந்துகின்றோம்.

திரு. முதலியார் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் மிக்குத் தொண்டாற்றியவர்கள். அவர்கள் பல திங்கட் டாள்களுக்குக் கட்டுரை எழுதியதன்றி, விருத்தப்பாவியல் என்னும் நூலையும் பதிப்பித்துள்ளார்கள். அவர்கள் செல்வப் பொருளினும் கல்விப் பொருளையே சிறப்பாக மதித்தவர்கள்; 'தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்.' என்னும் திரு மொழியின் அருமை யறிந்து கடைப்பிடித் தொழுகியவர்கள். அவர்கள் மக்களுள், திரு. சோக்கம்மா, பி.ஏ., பி.எல்., எல்.டி., என்னும் பட்டங்களைப் பெற்றவர். திரு. இராசேசுவரி அம்மா, திரு. பதுமாவதி அம்மா என்னும் இருவரும் எம்.ஏ., எல்.டி., பட்டங்களைப் பெற்றவர்கள். இம் மக்களெல்லாம், 'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லென் னுஞ் சொல்.' என்னும் திருக்குறளுக்கு எடுத்துக் காட்டா யுள்ளவர்கள்.

மேற் குறித்தவாறு பெருந்தன்மை மிக்க தமிழராகிய திரு. தணிகாசல முதலியார் அவர்களது பிரிவாற்றாது பெரிதும் வருந்தி, அவர்கள் குடும்பத்தார்க்கு யாம் ஆறுதல் கூறு கின்றோம்.

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

நம் செந்தமிழ்த் தாய்மொழித் தொடர்புடைய கன்னட மொழித் திராவிடத் தலைவர் மைசூர் அரசர் சிறப்புமிக்க வீரத் திரு. (Sir) ஸ்ரீ கிருஷ்ணராச உடையார் அவர்கள் இவ்வுலக வாழ்வு நீத்த செய்தி யறிந்து யாம் பெரிதும் வருந்துகின்றோம். அவர்கள் நல்லொழுக்க நெறிநின்று, காவற் கடன் பூண்டு, செங்கோல் செலுத்தி, மன்னுயிரைத் தன்னுயிர்போற் புரந்து வந்த சிறப்பு உலகம் அறிந்ததே. அவர்கள் மறைவு பொதுவாக உலகத்துக்கும், சிறப்பாகத் திராவிட நாட்டுக்கும் பெருங் குறையே. நற்பதியை யிழந்த அரசியார்க்கும், இளவரசர்க்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

ஒ ப ஒ ம ஒ ஒ



இராவ் சாகிப் திரு. அ. சு. அழகண்ணன் செட்டியார்.

போடிநாயக்கனூர்ப் பெருநிலக் கிழவர் இராவ் சாகீப் திரு. அ. சு. அழகண்ணன் செட்டியார் அவர்கள், விக்கிரம ஆண்டு ஆடித் திங்கள் உக ஆம் நாள் (5—8—40), நம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு யாம் பெரிதும் துயருறுகின்றோம். செப்பரும் துயர் மிகுதியுற்ற செட்டியார் அவர்களது வழித்தோன்றல்களுக்கும் ஏனைய உறவினர்க்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

திரு. **அழகண்ணன் செட்டியார்** அவர்கள் எமக்கு உற்ற நற்றுணைவருள் ஒருவர். அவர்கள் தம் முயற்சியாலே பெரும் பொருளீட்டி, நன்னிலையுற்று, ஈட்டிய பொருளை நற்பயன் பெறுத்திப் புகழ் பெற்றவர்கள். நம் தாய்மொழி வளர்ச்சி கருதி நம் சங்கத்துக்குப் பலவகைகளிலும் உதவிசெய்து வந்தவர்கள்; நம் சங்கத்து ஆயுள் உறுப்பினருள் ஒருவர். அவ்வப்பொழுது நம் சங்கத்துக்குப் பொருளுதவி செய்ததன்றி, நம் சங்கத்து வெள்ளி விழாவின்போது செந்தமிழ்ப் புலவர் கல்லூரிக்கென ஓராயிரம் வெண்பொற் காசுகள் மனமுவந் தளித்த பேரன்பர். இப் பெருஞ் செல்வரிடம் யாம் பின்னும் பல உதவிகளை நாடியிருந்தோம். அவர்களும் எம் விருப்பங்களை யெல்லாம் முடித்து மகிழ்வதாகவும் சொல்லியிருந்தார்கள். இச் செல்வர் மறைவினால் தமிழுலகம் ஒரு சிறந்த நன்மகனை இழந்துவிட்டது; எமக்கும் புரப்பாளர் ஒருவரை இழந்த பெருங்குறை யாயிற்று. செட்டியார் அவர்களது வழித்தோன்றல்கள் இப் பெருங் குறையை நீக்கிவிடுவார்கள் என்று யாம் ஆறுதல் கொள்கின்றோம்.

ο ο ο ο ο ο

சென்னைத், தமிழர் நல்வாழ்க்கைக் கழக வேண்டுகோள் ஒன்று வெளிவந்துள்ளது. அதிற் குறிப்பிட்டுள்ள நோக்கத்தையும், அந்நோக்கத்தை முற்றுவிக்கக் கூறியுள்ள வழிகளையும் யாம் பாராட்டி ஒப்புகின்றோம். மேலாவன செய்வது, தமிழர் என்று சொல்லிக்கொள்வார் ஒவ்வொருவரது கடமையாகும்.

ο ο ο ο ο ο

கங்கை கொண்ட
சோழபுரத்துப் படமொன்று

திரு. பெ. கோவிந்தராசர், பணியாளர் பொதுநலக் கருத்தாளர்,
தென் னிந்திய இருப்புப் பாதை, திருச்சிராப்பள்ளி.

இந்தப் படம் கங்கை கொண்ட சோழபுரத்தில் எடுத்தது. இது சண்டேசுர நாயனார் படம். பெரிய புராணத்தில் உள்ள கீழ்க் கண்ட செய்யுட்களைப் படித்த பிறகு இந்தப் படத்தை ஊன்றிப் பாருங்கள்.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி யனைத்துநா
முண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்கு மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் வியங்க ளெழச்சைவ
நல்லா றோங்க நாயகமா நங்கள் பெருமான் றொழுதணைந்தார்.

படத்தில் காணும் உருவங்களைச் செதுக்கியவன் பெரிய புராணத்தை நன்றாகப் படித்தவன் என்பதா? அல்லது சேக்கிழார் இவ் வுருவங்களைக் கண்ட பிறகு பெரிய புராணத்தை எழுதினார் என்பதா? என்னும் ஐயங்கள் உண்டாகின்றன. சேக்கிழார் தெய்வப் புலவ ரானதால், அவர் சிற்பங்களைக் காண வேண்டியதே யில்லை. சிற்பிதான் அவர் செய்யுட்களைச் சுவைத் தறிந்து செதுக்கினான் பிற்காலத்தில் என்னலாம்.

இரண்டாம் பாட்டில் சொல்லியுள்ள பல்லாயிரம் கணநாதருக்குப் பதிலாக இருவரே காட்டப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பாடி யாடிக் களிபயில்வது எவ்வளவு ஏற்றமாய்க் காட்டப்பட்டிருக்கிறது? மறைகள் பசு வினங்களாகக் காட்டப் பட்டிருக்கின்றன. பல்லியங்களின் ஒலியெலாம் தேவகான மானதினால் கேட்க முடிவதில்லை. பூ மழையோ கன்மாரி யாகும்; ஆனதினால் அதுவும் காட்டப்பட வில்லை.



கங்கைகொண்ட சோழபுரத்துச்
சண்டேசுர நாயனர் காட்சி.

அறந்தாங்கி அரசு

திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், தமிழாசிரியர், கும்பகோணம்.

நம் தமிழகம் முற் காலத்தில் சேர சோழ பாண்டியராகிய மூன்று தமிழ் வேந்தராலும் அரசாளப்பெற்று வந்தது என் பதை யாவரும் அறிவர். இதனை, 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்னும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூற்றினாலும் இனிது உணரலாம். அப் பெரு வேந்தர்களைப் 'போந்தை வேம்பே ஆரென வரூஉம், மாபெருந் தானையர்' என்று பிறிதோ ரிடத்தும் அவ் வாசிரியர் பாராட்டி யுள்ளனர். இதனை நோக்கு மிடத்து, நம் தமிழகத்திற்கும் சேர சோழ பாண்டியர்க்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு மிகத் தொன்மை வாய்ந்தது என்பது தெள்ளிதின் விளங்கும்.

மூவேந்தரது ஆட்சிக் குட்பட்டிருந்த இந் நிலப் பரப்பில் சில குறுநில மன்னரும் அந்நாளில் இருந்தனர் என்பது சங்க நூல்களால் அறியப்படுகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் இவர்களை, 'மன்பெறு மரபின் ஏனோர்' எனவும் குறித்துள்ளனர். இன்னோர் முடியுடை வேந்தர் மூவர்க்கும் உற்றுழி உதவி வந்தவர்கள்; அவர்களைப்போல் 'வில்லும் வேலும் கழலும் கண்ணியும், தாரும் ஆரமும் தேரும் வாளும்' உடையவர்கள்.

கடைச் சங்க நாளில் இக் குறுநில மன்னர்கள் **வேளிர்** என்று வழங்கப்பெற்றனர். பறம்பு நாடு, மிழலைக் கூற்றம், முத்தூர்க் கூற்றம், பொதியில் நாடு, ஆவிநன் குடி முதலியவற்றில் வாழ்ந்த குறுநில மன்னர் முற்காலத்தில் **வேளிர்** என்று வழங்கப் பெற்றமை, அகநானூறு, புறநானூறு முதலான சங்க நூல்களால் அறியக்கிடக்கின்றது. இவர்கள் **வேள்** எனவும், **அரசு** எனவும், **அரையர்** எனவும் அந்நாளில் வழங்கப்பெற்று வந்தனர் என்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. 'மண்டல மாக்களுந்

தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும் காங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ் சிக்கலும், வல்லமும், கழாரும் முதலிய பதியிற் றோன்றி, வேள் எனவும், அரசு எனவும் உரிமையெய்தினோர்.'* என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலும் இதனை வலியுறுத்தல் காண்க. வழுத்தூர் அரசு, சூரைக்குடி அரசு, அறந்தாங்கி அரசு, சேந்தமங்கலத் தரசு, புல்வய லரசு என்போர் நம் தமிழகத்தில் முற்காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர் ஆவர். இவர்களுள் அறந்தாங்கி அரசு என்று பெருமையுடன் முன்னர் வாழ்ந்துவந்த குறுநில மன்னர் வறலாறே ஈண்டு ஆராயப்படுவ தாகும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி என்ற நகரம் ஒன்றுளது. மாயூரத்திலிருந்து தெற்கே செல்லும் இருப்புப் பாதை இப்பொழுது இவ் வறந்தாங்கி நகரத்தில்தான் முடிவுறுகின்றது. இந் நகரைச் சூழ்ந்து பெரிய மதிலும் அகழியும் அழிவுற்றுக் கிடத்தலை இன்றுங் காணலாம். இஃது ஒரு காலத்தில் அரசர் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய திருவுடை நகரா யிருந்திருத்தல்வேண்டும் என்பதை இவை நன்கு புலப்படுத்துகின்றன. இந் நகரிலிருந்து முன்னாளில் ஆட்சி புரிந்தவர்களே அறந்தாங்கி அரசு என்ற பெயருடன் நிலவிய குறுநில மன்னர்கள். இவர்கள் தொண்டைமான் என்ற பட்டமுடையோர்; பல்லவர் மரபினர்; ஆளுடையார் கோயில் என்று இந் நாளில் வழங்கப் பெறுவதும், மணிவாசகப் பெருமானுக்குச் சிவபெருமான் செந்நெறி அறிவுறுத்தியதும் ஆகிய திருப் பெருந் துறையில் பெரிதும் ஈடுபாடுடையோர்; அங்கு எழுந்தருளி யுள்ள இறைவனையே தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தோர். இச் செய்திகளுள் சிலவற்றைக் "காஞ்சிபுர வாரா தீசுவரன் ஆளுடைய தம்பிரானார் ஸ்ரீபாத பக்தன்" என்று இன்னோரன்ன கல்வெட்டுக்கள் கூறுவதால் அறியலாம். அன்றியும், இவர்கள் திருப் பெருந்துறையில் பல அரிய திருப்பணிகள் புரிந்து நாள் வழிபாட்டிற்கும் பிறவற்றிற்கும் விட்டுள்ள நிபந்தங்களாலும் இதனை உணரலாம்.

---

* தொல். பொருள். அகத்திணையியல் 30ஆம் சூத்திரம் உரை.

கி. பி. ஆரும் நூற்றுண்டின் இறுதியிலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டு முடிய நம் தமிழகத்தின் பெரும் பகுதி பல்லவர் ஆட்சிக் குட்பட்டிருந்தது என்பது வரலாற்று ஆராய்ச்சியால் அறியப்பெற்ற தாகும். **முதல் ஆதித்தசோழன்** ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் பல்லவர்களைப் போரில் வென்று சோழ மண்டலத்தையும் தொண்டை மண்டலத்தையும் கைப் பற்றினன். பின்னர், பல்லவர்களுள் சிலர் சோழ மன்னர்க்குத் திறை செலுத்தும் குறுநில மன்னர் ஆயினர்; சிலர் அவர்கள் பால் அமைச்சர், படைத் தலைவர், திருமந்திர ஓலை முதலான அரசியல் அதிகாரிகளாகவும் வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் வாழ்ந்து வந்த பல்லவ குலத் தலைவர்களுள் **அறந்தாங்கித்** தொண்டைமானும் ஒருவன் ஆவான். இத் தொண்டைமான் மரபினர் **அறந்தாங்கி அரசு** எனவும் **வணங்கா முடித் தொண்டைமான்** எனவும் அறந்தாங்கியில் புகழுடன் வாழ்ந்து வந்த செய்தி பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. இன்னோரது வரலாற்றைத் தொடர்பாக அறிந்து கோடற்குரிய சான்றுகள் இந்நாளில் கிடைத்தில. ஆயினும், கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு ஒருவாறு ஆராய்ந்து முடிவு காண்பாம்.

புதுக்கோட்டைக்கு வடகிழக்கிலுள்ள **வேசிங்கி** நாட்டில் **வளத்து வாழவிட்ட பெருமாள் தோண்டைமான்** என்பவன் கி. பி. 1201இல் இருந்தனன் என்று தெரிகிறது. இவனே, அறந் தாங்கித் தொண்டைமான்களுள் மிகத் தொன்மை வாய்ந்தவன். எனவே, கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் இக் குடியினர் தம் ஆட்சியை அங்கு நிறுவியிருத்தல்வேண்டும். இவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்தவர் யாவர் என்பது புலப்பட வில்லை.

கி. பி. 1426 முதல் 1443 வரையில் **குலசேகர தோண்டை மானும்**, கி. பி. 1443இல் **சூரியதேவர் சுந்தரபாண்டியத் தோண்டை மானும்**, கி. பி. 1444 முதல் 1453 வரையில் **அழகிய மணவாளப் பெருமாள் தோண்டைமானும்** அரசாண்டனர். இவர்களைப் பற் றிய வரலாறு தெரியவில்லை. இவர்கள் மூவரும் உடன்பிறந்தவர்

களாக இருத்தல் கூடும் என்று கல்வெட்டுத்துறை (இலாக்கா) ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அழகிய மணவாளப் பெருமாள் தொண்டைமானுக்கு இலக்கணத் தண்ணுயகத் தொண்டைமான் என்ற புதல்வன் ஒருவன் இருந்தனன்.[1] இவனுக்குப் பின்னர்த் திருநெல்வேலிப் பெருமாள் தொண்டைமானும்[2] ஏகப்பெருமாள் தொண்டைமானும் ஆட்சிபுரிந்தனர்.

இவர்களுள் ஏகப்பெருமாள் தொண்டைமான் கி. பி. 1481 முதல் 1499 வரையில் அரசாண்டான். இவன் கல்வெட்டுக்கள் புதுக்கோட்டை நாட்டில் பழங்கரை, வாளவர் மாணிக்கம், கோவிலூர் முதலான ஊர்களில் காணப்படுகின்றன. இவ் வேந்தனுக்கு மூன்று புதல்வர் இருந்தனர். அன்னோர் தீராத வினை தீர்த்தான் தொண்டைமான்[3], ஆவுடைய நயினார் தொண்டைமான்[4], பொன்னம்பல நாத தொண்டைமான் என்போர்.

இவர்களுள், பொன்னம்பல நாத தொண்டைமான் கி. பி. 1514 முதல் 1569 வரை ஆட்சி புரிந்தான். இவன் கல்வெட்டுக்கள் புதுக்கோட்டை நாட்டிலும் இராமநாதபுரம் சில்லாவிலும் காணப்படுகின்றன. எனவே, இவனது நாடு மிகப் பெருகி இக்காலத்திலுள்ள புதுகோட்டை நாட்டின் ஒரு பகுதியையும், இராமநாதபுரம் சில்லாவின் ஒரு பகுதியையும், தஞ்சாவூர் சில்லாவிலுள்ள அறந்தாங்கித் தாலூகாவையும் தன்னகத்துக் கொண்டு விளங்கிற்று என்று கூறலாம். இவன் சிறந்த சிவபத்தியுடையவன். இவன் சிவாலயங்களில் தன் பெயரால் அலைவிலஞ்சாதான் சந்தி, பொன்னம்பல நாதன் சந்தி என்று கட்டளைகள் அமைத்து, அவற்றிற்கு நிபந்தங்கள் விட்டிருக்கின்றான். இவன் தன்னை ஆவுடைய தம்பிரானார் சீபாத பக்தன் என்று கூறிக் கொண்டமை கல்வெட்டுக்களால் அறியப்படும். அறந்தாங்கியிலிருந்து அரசாண்ட குறுநில மன்னருள் இவனே மிகச் சிறந்தவன் எனலாம். இவனுக்கு அந்நாளில் வழங்கிவந்த, அச்ச

1. The Inscriptions of the Pudukottah State—No. 794.
2. 1469 A. D—Ins. No. 125 of 1916.
3. கி.பி. 1497. The Inscriptions of the Pudukottah State—No 830.
4. கி.பி. 1499. Do. Do. —No. 832.

மறியாத பெருமாள், அலேவில் அஞ்சாத பெருமாள் என்னும் பட்டங்கள் இவன் பெரிய வீரன் என்பதை நன்கு புலப்படுத்து கின்றன. ஏழு நாளேயில் ஈழந் திறைகோண்ட பெருமாள் என்ற மற்றொரு பட்டமும் இவனுக்கு உளது. இஃது இவன் ஈழ மண் டலத்தின் மீது படையெடுத்துச் சென்று, அதனைவென்று திறைகொண்ட வீரச் செயலே உணர்த்துகின்றது. இவ் வரிய செயலேயும் இவன் ஏழு நாட்களில் செய்துமுடித்தனன் என்பது ஈண்டு அறியத்தக்க தொன்றும்.

ஈழநாட்டு மன்னன் விசய நகர வேந்தனுகிய கிருஷ்ணதேவ ராயனுக்குத் திறை செலுத்தி வந்தான். அவன் ஒரு முறை அதனைக் குறித்த காலத்திற் செலுத்தாமைபற்றி, அவ்வேந்தற் காகப் போன்னம்பலநாத தோண்டைமான் இலங்கை மீது படை யெடுத்துச் சென்று, அதனை ஏழு நாட்களில் வென்றனன் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இவன் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளமை யின், இவனது வாழ் நாளில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அவற்றையெல்லாம் இந்நாளில் அறிய இயலவில்லே. இவன் வேள் பாரியின் பறம்பு* நாட்டி லுள்ள கோடுங்குன்ற முடைய சிவபெருமானுக்குச் சிறுகாலேச் சந்திக்கும், தன் பேரால் அமைத்த தொண்டைமான் சந்திக்கும் திருநாமத்துக் காணியாக மேஹூர் என்ற ஊரை அளித்த செய்தியை உணர்த்தும் கல்வெட்டு ஒன்று உளது. அதனை இக்கட்டுரையின் இறுதியிற் காணலாம்.

போன்னம்பல நாத தோண்டைமான் புதல்வன் வரவினேத தோண்டைமான் என்பவன். இவனுக்குப் பிறகு ஆண்டியப்பன் அச்சுத நாயகத் தோண்டைமான் கி.பி. 1577 இல் அரசாண்டான். இத்தொண்டைமான்களின் வழியினர் பதினெட்டாம் நூற்றாண் டிலும் அறந்தாங்கியில் ஆட்சிபுரிந்தனர் என்று தெரிகிறது. இரகு

---

* பறம்பு நாடு பிற்காலத்தில் திருமலே நாடு என்று வழங்கப்பெற்று வந்தது என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகிறது.

நாத வணங்காமுடித் தொண்டைமான் மகனான அருணாசல வணங்காமுடித் தொண்டைமான் என்பான் கி. பி. 1713இல் திருப் பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் சில ஊர்கள் இறையிலியாக அளித்த செய்தி ஒரு செப் பேட்டால் அறியப்படுகிறது.*

இங்ஙனம் சிறப்புடன் ஆண்டுவந்த இன்னோர் தம் நாட் டையும் அரசுரிமையையும் எப்போது எவ்வாறு இழந்தனர் என்பது புலப்படவில்லை. தலைநகராகிய அறந்தாங்கியும் தன் பெருமையும் வனப்பும் இழந்து, தனது பழைய நிலையை ஒரு சிறிது உணர்த்தும் இடிந்த மதிலும் அழிந்த அகழியும் உடைய சிற்றூராக இந்நாளில் உளது. கால வேறுபாட்டால் உண் டாகும் மாறுதல்களுக்கு உட்படாதது இவ்வுலகில் யாதுளது?

பிரான்மலையி லுள்ள பொன்னம்பலநாத தொண்டைமானது கல்வெட்டு.

(1) ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமான் மஹா மண்டலேசுவரன் அரிய ராய விபாடன் பாஷைக்குத் தப்புவ ராயிர கண்டன் கண்டனுடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ (2) தெட்சிண பச்சிம உத்தர சமுத்திராதிபதி எம் மண்டலமும் கொண்டு எழுந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணதேவ மகாராயர் பிருதுவி ராச்சியம் பண்ணி அருளாநின்ற (3) சகாப்தம் 1440 இதன் மேல் வெகுதான்ய வருஷம் உத்தராயணத்து மிதுன நாயற்று அபரப் பட்சத்து அமாவாசியையும் மங்கலவாரமும் விருத்தி (4) யோகமும் பெற்ற இற்றை நாள் சூரியகிரண புண்ணிய காலத்து திருமலை நாட்டு திருக்கொடுங்குன்றத்து நாயினுர் நல்ல மங்கைபாகற்கு அறந்தாங்கிஅரசு அச்சமறி (5) யாதபெருமாள் முகிலின் கீழ்த்திரியும் இளவன்னியர் மிசுரகண்டன் ஆட்டுக்கு ஆனைவழங்கும் பெருமாள் ஏழு நாளையில் ஈழந் திறை கொண்ட பெருமா (6) ள் கோன் பாத .... யாதபெருமாள் காஞ்சி

* செந்தமிழ் 12ஆம் தொகுதி, 441ஆம் பக்கத்தில் நான் வெளி யிட்டுள்ள தொண்டைமான் சாசனம் பார்க்க.

புரவராதீசுவரன் ஆவுடைய தம்பிரானர் ஸ்ரீபாத பக்தன் ஏகப் பெருமாள் தொண்டைமானர் புத்திரன் (7) பொன்னம்பல நாத தொண்டைமானர் நாயினர் நல்ல மங்கை பாகற்கு உபைய மாகக் கட்டின சிறு காலைச் சந்திக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு (8) வேண்டும் நித்தம் நிமந்தங்களுக்கு நம் பேரால் கட்டின பொன்னம்பல நாத தொண்டைமானர் சந்தியாக அமுது செய்யும்படிக்குக் கொ (9) டுத்த இந்நாயினர்................தேவ தாந .... நாமத்துக் காணியாக சோழ பாண்டிய வளநாட்டு மேலூர் பெரு நான்கெல்லைக்குள்பட்ட (10) தும் சாஹிரண் யோதகதர பூர்வமாக திருநாமத்துக் காணியாக சந்திராதித் தவற் செல்லக் குடுத்தபடியாலே இதுக்குள் உள்பட்ட (11) நிதிநிக்ஷேப ஜல பாஷாண கூப தடாகாதியும் தம்பிரானுற்கே உரித்தாக கடவதாகவும். இவ்வூர்க்கு வரும் கடமை கா (12) ணிக்கை வேண்டுகோள் விநியோகம் மற்றும் எப்பேர்ப் பட்ட வரி உபாதியும் கழித்துக் குடுத்தபடியாலே சந்திராதித் யவ (13) ற் செல்ல சர்வ மான்யமாக திருநாமத்துக் காணியாக அநுபவித்துக் கொள்ளவும். கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொ (14) ண்டு திருநாமத்துக் காணியாக சந்திராதித்யவற் செல்ல அநுபவித்துக் கொள்ளவும். இந்த தன்மத்துக்கு அகிதம் பண்ணி (15) னவன் கங்கைக் கரையில் கபிலையும் பிராமணனையும் மாதா பிதாவையும் குருவையும் கொன்ற தோஷத்திலே போ (16) கக் கடவனுகவும். இந்த நேரிலே சருவமானிய மாகப் பற்றி அனுபவித்துக் கொள்ளவும். அறந் (17) தாங்கி கணக்கு அடியார்க்கு நல்லான் கற்பூரக் காலிங்க ராயன் எழுத்து.[5]

---

5. The Piranmalai Inscription of Ponnampalanatha — Epi. Ind. Vol. xxi, No. 3.—Ins. 19.

என் பெயர் பேதைச் சோழன்

திரு. ச. க. கோவிந்தசாமிபிள்ளை, எம். ஏ.,
வரலாற்று விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

இக் குறிப்பு இத் தலைப்பை விளக்குவான் எழுந்தது. நட்பெனும் நறவம் மாந்திய **கோப்பெருஞ் சோழன்** தன் நண்பன் **பிசிராந்தையை,**

" தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடையன் "

என விதந்து பேசுகிருன். தன் பெயர் **கோப்பெருஞ் சோழனுக,** அதைத் தானே குறிப்பிடுங்கால் பெயர் அமைந்த முறையிற் கூறுதல் தற்புகழ்ச்சி யாகும் என நாணி, **பேதைச் சோழன்** என்றனனே யன்றி, **பிசிராந்தை** அங்ஙனம் கூறிக்கொள்ள வில்லை. அவன் தன் பெயர் வேருகத், தன்னைக் **கோப்பெருஞ் சோழன்** எனவே கூறிக் கொண்டான். தான் அவன் என்னும் உணர்ச்சி யற்ற நட்பு நிலை அதுவாம். ஒன்றில் காலை அன்றில் போல, ஒருவன் இறந்தவழி மற்றவனும் இறந்தனனெனில், ஒருவனின் பெயரை மற்றவன் சூட்டிக் கொள்வதில் வியப் பொன்றும் இல்லையே. உயர்ந்த நட்புநிலையில் உணர்ச்சியால் ஒன்றுபட்டாரிடையே நிகழ்கின்ற இச் செயல் புறநானூற்றில் மற்ருெரு செய்யுளாலும் விளக்கமுறும். **பாரி**யுடன் நட்பெனும் நல்லறம் பூண்டொழுகிய **கபிலர் இளங்கோவேளை** நோக்கிக் கூறுகிருர்:

" இவரா ரென்குவை யாயின் இவரே
....
நெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழன்; இவரென் மகளிர்."

எனப் **பாரி** மகளிரைத் தன் மகளி ரென்றது யாங்ஙனம்? நட்பு வயப்பட்டுத் தான் பிறன் என்னும் வேற்றுமை உணர்ச்சி யற்றதால் **பாரி** மகளிர் **கபிலர்** மகளிரானுர். ஆகையால் **பிசிராந்தையின்** பெயர் **கோப்பெருஞ் சோழன்** என்ருதலில் வியப் பொன்றும் இல்லையாம். நட்பின் திறன் தான் என்னே!

சிலம்பின் முச்சுவை.

வித்துவான் சே. வேங்கடராமச் செட்டியார்,
அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி மாணவன்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௪, பக்கம் 144.)

இளிவு என்பது ஒருவன் பிறரால் இகழப்பட்டு எளியனாதல் எனப் பொருள்படும். இத் தன்மையதாய இளிவின்கண் பிறந்த அழுகையை, மதுரைக் காண்டத்துக் கொலைக்களக் காதையில், பெண்ணணங்காய கண்ணகியின் காற்சிலம்பை விற்றுவர மதுரை நெடுந்தெருவில் சென்ற கோவலன், எதிர்ப்பட்ட பொற்கொல்லனுக்குக் காட்ட, அப் பொற்கொல்லன் பாண்டியன் மனைவியின் சிலம்பைக் களவு செய்தவனாகலின், இச் சிலம்பு காட்டித் தான் கள்ள னல்லனென்பதைத் தெரிவித்து இக் கோவலனைக் கள்வ னாக்கலா மென்னுங் கருத்துடையனாய், அந்தப்புறஞ் செல்லும் அரசற்குக் காட்டித் தான் கருதியதை யுரைக்க, அதைக் கேட்ட அரசன், ஆராயானாய்க், காவலரை விளித்துத், 'தேவியின் சிலம்பு இவன் கூறும் கள்வன் கையதாயின், அக் கள்வனைக் கொன்று நம் சிலம்பைக் கொணர்க.' எனக் கட்டளை யிட்டான் என்ற கருத்தமைந்த,

> "வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
> சினையலர் வேம்பன் றேரா னாகி
> யூர்காப் பாளரைக் கூவி யீங்கென்
> றாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
> கன்றிய கள்வன் கைய தாகிற்
> கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென"

என்ற அடிகளில் அமைத்துள்ளார். இவ்வடிகளில், கோவலன், தான் குற்றமற்றவ னாயினும், வினைவயத்தால் பொற்கொல்லனாலும் அவன் சொற் கேட்ட அரசனாலும் கள்வன் என இகழப் படுதல் காண்க.

இனி, இரண்டாவதாய இழவு நிலைக்களனாகப் பிறந்த அழுகைச் சுவையை அமைத்துள்ள இடத்தைக் காண்பாம். இழவு என்பது தனக்குரிய பொருளையும் கிளைஞரையு மிழத்தல்

என்று பொருள்படும். இவ் விழவு காரணமாகப் பிறந்த அழுகைச் சுவையைத் துன்பமாலையில் அமைத்துள்ளார். இடைக் குல மகளாய மாதரி, தீய குறிகள் நிகழக்கண்டு, அதற்குச் சாந்தியாகக் குரவை யாடித் திருமாலை வணங்கும் பொருட்டு நீராடச் சென்றவள், ஊரில் எழுந்த அரவத்தைக் கேட்டு, மன முடைந்து, விரைவொடு வந்து, ஒன்றுங் கூறுது, மயங்கி நிற்கக் கண்ட கண்ணகி, ஐயமுற்று, 'ஊரவர் கூறிய சொல் யாவது?' எனப் பன்முறை வினவ, மாதரி,

" அரைசுறை கோயி லணியார் ஞெகிழங்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே "

எனக் கோவலன் கொலையுண்ட திறத்தைக் கூறக் கேட்ட கண்ணகி யழுத தன்மையை,

" பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணு வென்னு வினைந்தேங்கி மாழ்குவாள் "

என விரித்துக் கூறியுள்ளார். இதன்கண், கண்ணகி, மனம் பொங்கியெழுந்து, பின்னர் அஃதியலாமையின், தரையில் விழுந்து கிடந்த தன்மைக்கு, வெண்கதிர் மதியம் மழை முகிலோடு வந்து நிலத்தையே யிடமாகக் கொண்டது எனக் கூறுமாறுள்ளது என உவமை கூறியுள்ளார். விரிந்த கூந்தலொடு மதி முகம் மண்ணில் கிடந்து புரள, சிவந்த கண் அழுகையான் பின்னுஞ் சிவக்கப் புலம்பி, 'எங்கே போயினுய்? என் தலைவா!' என மிக வருந்தி மன மாழ்கிய தன்மையை விவரித்துள்ளார். இங்கு இழவு காரணமாகப் பிறந்த அழுகை யமைந்துள்ளமை காண்க.

இனி, அசைவு என்பது ஒருவன் முன் னிலையினின்றும் வேறுபட்டு வருந்துதல் என்பது பொருள். இத்தகைய அசைவின்கண் பிறந்த அழுகைச் சுவையை யினிக் காண்பாம். கண்ணகி, தன் கணவன் கள்வ னல்லன் என்பதைக் கதிரவனு லறிந்து, பின்னர்த் தன் பெண்மைக்குரிய நாண் முதலிய நற்பண்புகளை யிழந்துவிட்டுச், சிலம்பேந்திய கையளாய், ஆண் மகனைப்போல அரசன் கோயில் வாயிலில் நின்று,

" வாயி லோயே வாயி லோயே
யறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
யிணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே"

எனத் துணிந்து கூறுந் தன்மையும், பின்னர் அரசனழைப்பிக்கச் சென்று, தன் கால் மணிப்பரற் சிலம்பு காட்டி அரசனை வென்ற தன்மையும் கண்ணகி முன் னிலையினின்று மாறிய தன்மை யன்றோ? பின்னரும் அக்கண்ணகி யாற்ருளாய், இட முலையைத் திருகித் தீயைப் பிறப்பித்து ஊரைக் கொளுத்திச் செல்லுகையில், நாடக மடந்தையர் ஆடரங்கை விடுத்து, இவளைக் கண்டு, 'தேரிலா மன்னனைச் சிலம்பின் வென்று, ஊர் தீ மூட்டிய இம்மகள் எந் நாட்டாள்கொல்? யார் மகள் கொல்?' என்று இரங்கி யழும்படிக் காதலனை யிழந்த துயரொடு மனங் கொதித்துப் பெருமூச் செறிந்து மறுகினின்று மறுகுவாள், கவலையின்கண் கவலுவாள், இயங்கலு மியங்குவாள், மயங்கலு மயங்குவாள், என வீரபத் தினியாய கண்ணகியின் னிலையைப் பின்னருங் கூறுதல் காண்க. இங்கு அசைவு நிலைக்களனுகப் பிறந்த அழுகைச் சுவை யமைந் துள்ளமை காண்க.

இனி, நான்காவதாய வறுமை நிலைக்களனுகப் பிறந்த அழுகைச் சுவையைக் காண்பாம். வறுமை யென்பது ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்களை யிழந்து அதன்கண் பற்றுச் செய்தல் என்று பொருள்படும். இத் தன்மையை,

" சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
மைத்தடங் கண்ணார் மைந்தர் தம்முடன்
செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை
நறுமல ரவிழ்ந்த நாறிரு முச்சித்
துறுமலர்ப் பிணையல் சொரிந்த பூந்துகள்
குங்கும மெழுதிய கொங்கை முன்றிற்
பைங்கா ழாரம் பரிந்தன பரந்த
தூமென் சேக்கைத் துனிப்பதம் பாராக்
காமக் கள்ளாட் டடங்கினர் மயங்கத்

திதலை யல்குற் றேங்கமழ் குழலியர்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வரொடு
பஞ்சியா ரமளியிற் றுஞ்சுதுயி லெடுப்பி
வானரைக் கூந்தன் மகளிரொடு போத"

எனவரு மடிகளிற் கூறிக், கண்ணகி யூட்டியதீயால் ஊரெரியுற்றக்கால், மதுரையி லுள்ள மைந்தரு மகளிரும் தாம் தாம் நுகர்ந்த நுகர் பொருள்களை விடுத்து, அதன்கண் பற்றுடையராய் வெளிப் போந்தார் என்பதை விவரித்துள்ளமை காணலாம். இங்கு வறுமை நிலைக்களனாகப் பிறந்த அழுகைச் சுவை யமைந்துள்ளமை யறிக.

இனி, மூன்றாவது காண்டமாகிய வஞ்சிக் காண்டத்தில் பெருமிதச் சுவையை நன்கு அமைத்துள்ளார். இப் பெருமிதச் சுவையும்,

" கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே."

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி நான்கு வகைப்படும். இந் நான்கினு முதற்கண்ணதாய கல்வி நிலைக்களனாகப் பிறந்த பெருமிதச் சுவையை யாண் டமைத்துள்ளார் என்பதை யாய்வாம். சேரன் செங்குட்டுவன் வட வாரியரை வென்ற தன்மையைச் சோழ பாண்டியர்க்குக் காட்டிவரச் சொல்லப்பட்ட நீலன் முதலியோர் வந்து அவ் விரு பெரு வேந்தரும் கூறிய மாற்றங் கூறக் கேட்டுத் தாமரைச் செங்கண் தழனிறங் கொள்ளும்படிச் சினந்த செங்குட்டுவனுக்கு மாடலன் என்ற பெயருடைய மறையோன், அச் செங்குட்டுவன் முன்னோர் பலரையுங் கூறி, அத்தகைய

" மீக்கூற் றாளர் யாவரு மின்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்"

என யாக்கை நிலையாமையையும்,

" செல்வ நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த வாரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ "

எனச் செல்வ நிலையாமையையும்,

" இளமை நில்லா தென்பதை யெடுத்தீங்
குணர்வுடை மாக்க ளுரைக்கல் வேண்டா
....
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை "

என இளமை நிலையாமையையும்,

" ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்கு நின் றியலாது
செய்வினை வழித்தா யுயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை "

என உயிரி னியல்பையுங் கூறி, மறக்கள வேள்வி செய்யாது அறக்கள வேள்வி செய்யுமாறு, தன் மறைநா வாய்க் கலப்பையால் உழுது, இறையோன் செவியென்னுஞ் செம்மையாய நிலத்தில் சிறந்த பொருளாய விதையை வித்தி, சினமிக்க செங்குட்டுவன் மனத்தை மாற்றி வேள்வி யியற்றுமாறு செய்தான் என்ற வரலாற்றில், மாடல மறையோன் தன் கல்விப் பெருமிதத்தால், போரின்கண் சென்ற செங்குட்டுவன் மனத்தை வென்று மாற்றினன் என்பது கல்வி நிலைக்களனாகப் பிறந்த பெருமிதச் சுவையாதல் காண்க.

இனி, தறுகண்மை நிலைக்களனாகப் பிறந்த பெருமிதச் சுவையைக் காண்பாம்.

" அடுந்தேர்த் தானை யாரிய வரசர்
கடும்படை மாக்களைக் கொன்றுகளங் குவித்து
நெடுந்தேர்க் கொடுஞ்சியுங் கடுங்களிற் றெருத்தமும்
விடும்பரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட
வெருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
யொருபக லெல்லையி னுண்ணு மென்ப
தாரிய வரச ரமர்க்களத் தறிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன் "

எனவரும் கால்கோட் காதை யடிகளில், செங்குட்டுவன் தன் அஞ்சாமையால் ஆரிய வரசர் படைத்திரளைக் கொன்று, கூற்றுவன் ஒரு பகலில் உயிர்த்தொகையை யொழியாமல் உண்ணுவான் என்பதை யாவரு மறியச் செய்தான் எனப் புகலுதலால், இங்குத் தறுகண்மை நிலைக்களனாகப் பிறந்த பெருமிதச் சுவை பெருமையுற்று விளங்குதல் காண்க.

இனி, இசைமை, கொடை யென்ற இரண்டன் நிலைக்களனுப் பிறந்த பெருமிதச் சுவையைக் காண்பாம்.

"பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்
காடகப் பெருநிறை யையைந் திரட்டித்
தோடார் போந்தை வேலோன் றன்னிறை
மாடல மறையோன் கொள்கென் றளித்து"

எனவரும் நீர்ப்படைக் காதையடிகளில், சேரன் செங்குட்டுவன் தன் னிறையளவாய ஐம்பது துலாம் பொன்னை மாடல மறையோன் கொள்ளெனக் கொடுத்தான் என்று கூறியிருத்தலின், கொடையான் வரும் பெருமிதச்சுவை யிங்குக் குறைவின்றி விளங்குதல் காண்க. இசைமையான் வரும் பெருமிதச் சுவையும் ஈண்டு அடங்குதலறிக. என்னை? தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

"உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்."

என்று கூறியிருத்தலின், புகழ்க் காரணம் ஈகையைவிடச் சிறந்த தில்லையென்றது போதருதலான் என்பது. அஃதன்றி, ஆரிய வரசரை வென்றமையானும், புதுமையாகக் கண்ணகிக்குக் கோட்ட மமைத்துப் பத்தினிப் பெண்டிரும் வீரர்களைப்போல் நடுகல்லில் அமைத்து வணங்கத் தக்கவர் என்ற கொள்கையை நாட்டில் நாட்டியமையானும், உளதாய புகழும் வஞ்சிக் காண்டத்தமைந்து அழகு செய்தல் காண்க.

இதுகாறும் கூறியவாற்றான், யாரும் விரும்பும் இயல்பினதாய உவகைச் சுவை நான்கு வகை யுடையதாய்ப் புகார்க் காண்டத்தும், உவகைக்குப் பின்னர்த் தோன்றும் அழுகைச் சுவை அங்ஙன மதுரைக் காண்டத்தும், துன்பத்தின் பின்னர் நிகழ்வதாய பெருமிதச் சுவை வஞ்சிக் காண்டத்தும் அமைந்து சிலம்பின் முச்சுவையாய்த் திகழ்ந் தழகுசெய்தல் காண்க.

மெய்ப்பாட்டியல்

திரு. S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L., பசுமலை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௩, பக்கம் 88.)

சூத்திரம். **23.**

" முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தி னகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றாயிரு நான்கே அழிவில் கூட்டம்."

கருத்து:—மேலெல்லாம் களவொழுக்க மெய்ப்பாடுகள் கூறி இது கற்புக் குரியன கூறுகின்றது.

பொருள் :—முட்டுவயிற் கழறல் – இற்செறிப்பு முதலிய கூட்டத்திற்கு இடையூறு உற்றுழி வரைவு வற்புறுத்தல்; முனிவு மெய்ந்நிறுத்தல்—வெறுப்பை மெய்ப்படு குறிப்பறிவுறுத்தல்; அச்சத்தின் அகறல்—அலரும், தலைவன் ஆற்றாறு மஞ்சி அவனணுகாது சேட்படுதல்; அவன் புணர்வு மறுத்தல்—வரையாது வந்தொழுகுந் தலைவன் கூட்டத்திற்குக் குறிமறுத்தல்; தூது முனிவின்மை—ஒழியாது உடனுறையும் அழிவில் கூட்டம் கருதிய தூதினை வெறுமை; அதாவது, காதற் கரப்பின்றி அவனுக்குத் தூதுய்க்கவும், அவன் தூது எதிரவும் விரும்புதல்; துஞ்சிச் சேர்தல்—வரையாத தலைவனை நேரின் மகிழாது மனமடிதல்; காதல் கைம்மிகல்—புணர்வு பெறுமல் வரைவு நீட்டித்த வழி கையிகந்த காதலால் நையுநிலை; கட்டுரை யின்மை—கையிகந்த காதலால் உரையொழிதல்; என்றாயிரு நான்கே அழிவில் கூட்டம்—எனவரும் அவ்வெட்டும் வரைந்து பிரியா வாழ்க்கை விருப்பின் மெய்ப்பாடாகும்.

குறிப்பு :—நான்கே என்பதன் ஏகாரம் தேற்றம்; அசையெனினும் அமையும். ஆயிடை எனற்போல, செய்யுளாதலின் ஆயிரு என அகரச் சுட்டு நீண்டது. 'என்றும் எனவும்'

எனும் சூத்திரப்படி, 'என்று' என்னும் எண்ணிடைச்சொல் ஒவ்வொன்றொடும் பிரிந்து சென்றொன்றுவதாம். மேலே, முதலில் "நகையே அழுகை" எனும் மூன்று முதல் "செல்வம் புலனே" (சூ. 11) என்னும் சூத்திரம் வரையிலும் அகப் புறத் திணைகளிரண்டற்கும் பொது மெய்ப்பாடுகளை விரித்து, அவற்றின்பின் அகப்பொருளை, அகத்திணை, களவு, கற்பென மூவியலாக வகுத்ததற் கேற்ப, அகவொழுக்க நிமித்தமாம் மெய்ப்பாடுகளையும் முத்திறப் படுத்தி, "ஆங்கவை ஒருபாலாக" (சூ. 12) என்பதில் அகப் பகுதிக்குப் பொதுவாய் அமைவனவற்றைத் தொகுத்துக் கூறி, பிறகு "புகுமுகம் புரிதல்" (சூ. 13) முதல் "இன்பத்தை வெறுத்தல்" (சூ. 22) என்பது முடிய அகத்தில் கரவுக் காதலாம் களவினுக் குரியன தெளிக்கப்பட்டன. இனி, மறையாது உடனுறையும் கற்புக் காதல் குறிப்பன கூறத் தொடங்கி, முதலில் உலகறிய இடையீடின்றி உடனுறை யின்ப மாண்புடைய மனையற வாழ்வினை வேட்டு வரைவு வற்புறுத்துந் தலைவி நிலைக்குரியன இதிற் கூறப்படுகின்றன. இதன் பிற்றைச் சூத்திரங்களால் வரைந்துடன் வாழும் திருந்திய கற்புக்குரியன விளக்கப்பெறும். எனவே, முன் களவுக் குரியவற்றிற்கும், பின் களவின் வழித்தாய கற்பிற் குரியவற்றிற்கும் இடையே, அச்சிறந்த கற்புயர் வாழ்வுதரும் வரைவு வேட்கைக் குரிய மெய்ப்பாடு கூறும் இச் சூத்திரம் அமைந்த செவ்வி உணர்ந் துவத்தற்பாற்று. இனி, 'அழிவில் கூட்டம்' என்றது களவிற் போலப் பிறர்க்கு மறைத்து இடையறவுபடுங் கரவுக் காதலைப் போலாது, உலகறிய ஒழியாது உடனுறையும் கற்புயர் காதற் கூட்ட வேட்கைக் குறிப்பு. 'கூட்டம்' இங்குக் கூட்டத் துணையாம் வரைவுவேட்கை குறிப்பனவற்றிற் காதலால் ஆகுபெயர்.

இனி, முட்டுவயிற் கழறலுக்குச் செய்யுள்:—

"...............நாரை
அறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழற லோம்புமதி தொடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மிற் றகுமோ வென்றனை துணிந்தே." (குறுந். 296.)

இதில், சிறைப்புறத் தலைவன் வரைவு நீட்டம் கடிந்து கழறற் பாற்ற தெனத் தோழிக்குக் குறிப்பாகச் சுட்டுவ தறிக. "பன்முட் டின்றால் தோழிநங் களவே" (அகம். 122.) என்னும் அகப் பாட்டடிக் குறிப்பு மதுவே.

முனிவு மெய்ந்நிறுத்தற்குச் செய்யுள் :—

" விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணும், கைந்நூல் யாவாம்,
புள்ளும் ஓராம், விரிச்சியும் நில்லாம்,
உள்ளலும் உள்ளா மன்றே தோழி
உயிர்க்குயி ரன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே." (குறுந். 218.)

" நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுதல் நோமென் னெஞ்சே." (குறுந். 4.)

இன்னும்,

" இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள்
ஆய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே." (அகம். 52.)

என்பது மது.

அச்சத்தி னகறற்குச் செய்யுள் :—

" அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனோ விலனோ பானாள்
ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆய மெல்லாம் உடன்கண் டன்றே." (குறுந். 311.)

" ....
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்

மடனுடை மையின் உயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே." (குறுந. 324.)

என்பது மது.

"...............................
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குரல் ஏனல்
உண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்பும் சோலை
இலங்குமலை நாடன் இரவி னானே." (குறுந். 360.)

இதுவு மது.

அவன் புணர்வு மறுத்தற்குச் செய்யுள் :—

"......................
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கும் அம்பலொடு
வாரல் வாழியர் ஐயவெந் தெருவே." (குறுந். 139.)

"...............................
நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோரும் தான்வா ழலளே." (அகம். 12.)

என்பது மது.

தூது முனிவின்மைக்குச் செய்யுள் :—

"...........................
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலின் நாணிய வருமே." (குறுந். 10.)

"..
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னாது
பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம் பெரும
நீயெமக் கின்னா தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே." (குறுந். 309.)

இக் குறுந்தொகைச் செய்யுட்களில் தணந்து வந்த தலைவன் தூதைத் தலைவி முனியாமையும்,

> " இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
> துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
> நன்றுமன் வாழி தோழி " (குறுந். 98.)

என்னும் செய்யுளில் தணந்துறையும் தலைவனுக்குத் தலைவி தூதுப்பபதை முனியாமையும் கண்டு தெளிக.

துஞ்சிச் சேர்தலாவது, வரைவு நீட்டுந் தலைவன் கூட்டம் மகிழாது தலைவி மன மிடிதல். சோர்தல் என்னுது சேர்தல் என்றதானும், துஞ்சலும், மடிமையு முன் " ஆங்கவை ஒரு பா லாக" எனும் சூத்திரத்துத் தனி வேறு கூறியதானும், இங்கு இத்தொடர் வாளா மடிந்து மனை வைகுதல் சுட்டாது, வரையாத் தலைவன் வரவு மகிழாது அவன் ஒழுக்கினுக்கு மாழ்கிப் பொலிவழி தலைவியின் மெலிவைக் குறிக்கும். துஞ்சல் மடிமை யாகாமை, "நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும்" என்று அவை வெவ்வேறு கூறப்பெறுதலானு மறிக. இதுவே பேராசிரியர்க்கும் கருத்தாதல், " வேண்டியவாறு கூட்டம் நிகழப் பெறுமையின், தலைமகனொடு புலந்தாள் போல மடிந்தொன்று மாதலின்" என்னும் உரைக் குறிப்பால் உணர்க.

இனி, "இஃது உரிமை பூண்டமையால் உறக்கம் நிகழ்தலா மாறும்" எனும் இளம்பூரணர் கூற்று ஏற்றது அன்மை தேற்றம். இவ்வாறு துஞ்சிச் சேரு முளநிலையை,

> "
> ....
> கடவுள் நண்ணிய பாலோர் போல
> ஓரீஇ யொழுகும் என்னைக்குப்
> பரியலென் மன்யான் பண்டொரு காலே." (குறுந். 203.)

என்பதில், 'முன் தலைவற்குப் பரிந்தேன்; அது கழிந்தது.' எனத் தலைவி கூறுங் குறிப்பானும் காண்க.

காதல் கைம்மிகுத்தது :—

> "
> ....
> ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்
> அகலினும் அகலா தாகி
> இகலுந் தோழிநங் காமத்துப் பகையே." (குறுந். 257.)

" உள்ளின் உள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமம்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே." (குறுந். 102.,

என்பது மது.

" கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்." (குறள். 1293.)

" நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும்." (குறள். 1254.)

என வரும் குறட் பாக்களும் காதல் கைம்மிகுந்தமை காட்டி நின்றன.

கட்டுரை யின்மை,

"கையி னுற்சொலக், கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன்." (சிந்தா.)

எனும் குணமாலை கூற்றில், கழி காதலால் உரை யறுதல் காண்க.

இன்னும்,

"..................... ....துறைவன்
குறியா னுயினும் குறிப்பினும் பிறிதொன்
றறியாற் குரைப்பலோ யானே." (குறுந். 318)

எனவும்,

" மெல்லிய வினிய மேவரு தகுந
இவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ
மறத்தியோ வாழியென் னெஞ்சே." (குறுந். 306)

எனவம் வருவனவற்றினும் தலைவி உரையறும் குறிப்பறிக.

(தொடரும்.)

லகர வெழுத்து.

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா டிஸ்திறிக்ட், இமாலயம்.

மொழிநூல் வல்ல ஆங்கில பண்டிதர் ஒருவர், சேர் றிச்சார்ட் பேஜட் (Sir Richard Paget) என்னும் பெயரினை யுடையார், உலகத்து மொழிகளனைத்திற்கும் பொதுவா யுள்ள இலக்கணங்களை ஆராயப்புகுந்து, லகர, மகர, னகரங்கள் இயக்கத்தைக் குறிப்பன வெனவும், அவற்றினுள் லகர வெழுத்தின் வழிப் பிறந்த லீலோ என்னும் மொழியானது மேலுங் கீழும் முன்னும் பின்னும் இயங்கி ஆடுகிற ஆட்டத்தினை இயல்பாகவே குறியீடு செய்து நின்றதெனவும் ஒரு தீர்ப்பினை வெளியிட்டார். அதற் காதாரமாக இந்துச் சீன தேசத்து மொழியிலே லீலோ என்னுஞ் சொல் ஆடலைக் குறிக்கு மென்றும், வடமொழியிலே லீலா என்பது விளையாடலைக் குறிக்கு மென்றும், ஆங்கிலத்திலே லல்லாபி என்பது தாலாட்டினைக் குறிக்கு மென்றும் எடுத்துக் காட்டினார்.

நமது மொழியிலே இவ் வெழுத்தானது ஒல்கியும், ஒசிந்தும் இயங்குகின்ற இயக்கத்தினையும், அவ் வியக்கங் காரணமாகப் பிறந்த ஒலிக் குறிப்பினையும், மென்னீர்மையும் மலர்ச்சியும் இயைந்த பல்வேறு பொருள்களையும் குறித்து நிற்கு மென்பது ஆன்றோர் வழக்கினா லறியக் கிடக்கின்றது. இயல்பாகவே நல்லிசைச் செய்யுளுக்கு நிலைக்களமாகி நின்ற நமது மொழியிலே இயற்கை வளத்தினைக் குறிக்கும் மொழிகள் பல, லகர வெழுத்துப் பயின்று நின்றன. நமது மொழியிற் போலவே பிற மொழிகளிலும் இவ்வெழுத்திற்கு இவ்வாற்றல் ஏற்பட்டிருக்கக் காண்கின்றோம். இப்பரிசே ஏனைய எழுத்துக்களுக்கும் சிற்சில சிறப்பியல்புகள் இயல்பாகவே அமைந்து நின்றவென்பது ஆராய்ச்சியா னறியக் கிடக்கின்றது. ஒற்று இடையிடுதலின்றித் தனி நெட்டெழுத்தின்பின் வரும் சகரமும், மொழி முதலில் நிற்கும் சகரமும் மென்னீர்மையாகிய இயக்கத்தினையும் அழகொடியைந்த தூய்மையையும் குறிப்பனவாம்.

செய்யுள் செய்வார் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் பெறச் செய்யுள் செய்யவேண்டு மாதலின், எழுத்துக்களின் ஆற்றலை யுய்த்துணர்ந்துகொள்வது அவர்க்கு இன்றியமையாத சாதனமாகும். மேலும், மிறைக்கவி யென்னும் சித்திரக்கவி போல்வன, ஓரெழுத்தாலே ஒரு செய்யுளை அமைக்கப் புகுந்து, இயற்கை வளங் குன்றிச் செயற்கை நலஞ் சேர்ந்து இடர்ப் படுவ வாகலின், இயற்கை நலஞ் சான்ற செய்யுள் செய்யப் புகுவார், தமது உள்ளத்திற் குறித்த எழுத்துப் பெருவரவிற் றாக வும், பிற வெழுத்துக்கள் கலந்தும் நிற்கச் செய்யுள் செய்தல் முறையாகும். செவி வாயாக உணர்தற் குரிய இவ் வாராய்ச்சித் துறையினைக் குறித்து ஒரு சில முடிபுகளையும், ஆன்றோர்வழக்கு களையும் ஈண்டுக் குறிப்பிடுவாம். தமிழ் மாணவர்கள் இவை போன்ற பல முடிபுகளைத் தாமாகவே ஆராய்ந்து கண்டு கொள் வார்களாக.

வெள்ளாம்பல் மலரினை யாம் **அல்லி** என்போம். அருச் சுனனது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மடவர லொருத் திக்கும் **அல்லி** யென்பது பெயர். தூய வெள்ளிய மலர் ஒன்றினை ஆங்கிலர் **லில்லி** என்பர். அந்நாட்டு மடவாருக்கும் **லில்லி** என்னும் பெயர் உளது. **வல்லி** யென்பது பூங்கொடி யினையும் பூங்கொடி போல்வாரையுங் குறிக்கும். பல்லவம்- இளந் தளிர்; சாலகம் - அரும்பு; மூலகம் - கிழங்கு; கமலம், சலசம் - தாமரை; கல்லாரம் - செங்குவளை; நீலம், உற்பலம்- கருங்குவளை. இவையன்றியும், அலர், மலர், காலை, மாலை, பாலை (பாலைப்பண்), வேலை (கடல்), மூலம், சீலம், அலங்கல், வலம்புரி, முல்லை, மல்லிகை, இவற்றையும் நோக்குக.

நாவுக்கு அரசராகிய **அப்பர் சுவாமி**களது திருப் பாடலிலே, மாசில்லாத வீணையையும், ஊரடங்கிய மாலைக் காலத்திலே தண்ணிய ஒளியினைப் பரப்பும் வெண்மதியினையும், மெல்லென வீசுந் தென்றலினையும், உவகை யளிக்கும் இள வேனிலையும், தண்மையும் இசையும் ஒருங்கு விரவிய வண்டார்ந்த பூம் பொய்கையினையும், இவ் வழகனைத்தும் ஒருங்கு கூடிய திருவடி

நீழலையும் கண்ணும் செவியும் நண்ணுதி னுணருமாறு அமைத்துத் தரும்எழுத்தாற்றலைச் சிறிது சிந்திப்போமாக.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."

மாசில், வீசு, மூசு, ஈசன் என்புழி வந்த நெடிற்றொடராகிய சகரமும்; மாசில், மாலை, வேனில், நீழல் என்புழி வந்த லகர வெழுத்தும்; வல்லொற்று வாரா தொழிதலும், இவ் வழகிய செய்யுளின் இனிய ஓசைக்குக் காரணமாவன. வீசு தென்றல் என்னுந்தொடர் தென்றற் காற்றினையே ஒலி யுருவாக்கி யுணர்த்துந் தன்மையது. சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கி லெழுந்த பின்வருஞ் செய்யுட்களை நோக்குவோமாக.

"தேம லங்கலணி மாமணி மார்பின்
செம்ம லங்கலணி செங்கம லத்தன்
பூம லங்கவெதிர் பாய்வன மாடே
புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குகள்த டம்பணை சூழும்
தண்ம ருங்குதொழு வார்கள்த மும்மை
மாம லங்களற வீடருள் தில்லை
மல்ல லம்பதியி னெல்லைவ ணங்கி.

நாக சூதவகு ளஞ்சா ளஞ்சூழ்
நாளி கேரமில வங்கா ரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழைம தூகம்
பொதுளும் வஞ்சிபல எங்கும்நெ ருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி
மீது கோகிலமி டைந்துமி ழற்றப்
போக பூமியினு மிக்குவி ளங்கும்
பூம்பு றம்பணைக டந்துபு குந்தார்.

வன்னி கொன்றைவழை சண்பக மாரம்
மலர்ப்ப லாசொடுசெ ருந்திமந் தாரம்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
கற்பு பாடலம் கூவிள மோங்கித்

துன்னு சாதிமரு மாலதி மௌவல்
துதைந்த நந்திகா வீரமி டைந்த
பன்ம லர்ப்புனித நந்தவ னங்கள்
பணிந்து சென்றனன்ம ணங்கமழ் தாரான்."

மணங் கமழ் தாரான் நந்தன வனத்தின் இயற்கை யழகிலே அழகுத் தெய்வமாகிய முழுமுதற் கடவுளைக் கண்டு பணிந்த சிறப்பினைக் கூறுகின்ற இச் செழுந் தமிழ்ப் பாடல் லகர வெழுத்துப் பயின்று வருதலையும், வடமொழியி லுள்ள ஹ என்னும் ஓசை பெற்ற நெடிற்றொடர்க் ககரமும், மெல்லின விடையினங் களும் பெருவரவிற் றாகி மெல்லோசை பெற்று நிற்றலையும் நோக்குக.

" குளிர்தரு கங்கைதங்கு சடைமா டிலங்கு
தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள்சூடி உமைபாக மாக
உடையா னுகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட
பெடைவண்டு தானு முரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகு
நனிபள்ளி போலு நமர்காள்."

ஆளுடைய பிள்ளையார் திருவாக் காகிய இச் செய்யுளிலும் மேற் குறித்த அழகுகள் அமைந்து நிற்பதை நோக்குக. திருத்தக்க தேவர் திருவாக்கிலே,

" கலையின் பிணைகன் றிடுமென் றுகசிந்
திலையின் னிழலவ் வயினின் மையினால்
நிலையின் னிழலு னதுவின் றுகொடுத்
துலையும் வெயினின் றுருகும் முரவோய்."

மென்னீர தாகிய மான்பிணையின்பா லன்பு செலுத்திய கலையின் செயலைக் கூறுமுகத்தான், லகர வெழுத்தானது சிருங்கார ரசமும், கருணாரசமும் தந்து நிற்றலையும், னகரவொற்று இரக்கக் குறிப்பினைத் தந்து நிற்றலையும் உய்த்துணர்ந்து கொள்க. னகர வொற்று இந் நீர்மைய தென்பதைச், "சிறிய கட்பறினே" என்னும் மன்னைக் காஞ்சியி னுள்ளுங் காணலாம். தேவர்

"குலைவா ழைபழுத் தகொழும் பழனும்
நிலமாத் தனதே முறுதீங் கனியும்
பலவின் றனமுள் ளுடையள் ளமிர்தும்
மலையாற் றயல்யா வுமடுத் துளவே."

என்னும் விந்தைச் செய்யுளி னுள்ளே, வாழைக் கனியும், மாங்கனியும், முள்ளுடை யள்ளமிர் தாகிய வருக்கைக் கனியும் உண்ணுதற்குப் பக்குவமாக உரித்து வைத்திருக்கின்ற அழகினை நோக்குக. லகர, ழகர, ளகரங்கள் இவ் வற்புதத்தைச் செய்கின்றன.

"முள்ளுடை யள்ளமிர்து" என்றமையால், மாங்கனி, வாழைக் கனியினும் பார்க்க, முட்புற வருக்கைக் கனியிடத்துத் தேவர்க்கு ஆசை அதிகமென் றெண்ண இடமுண்டு.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தழிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே."

என்னுந் தோலா மொழித் தேவர் வாக்கையும் நோக்குக.

எழுத்தறி புலவராகிய சுப்பிரமணிய பாரதியார் எவ்வழியிலும் பண்டையோருக்கு இளைத்தவ ரல்லர். சிருங்கார ரசத்தையும், பக்தி ரசத்தையும் வருவிக்குமாறு லகர வெழுத்தினைப் பாரதியார் உபயோகிக்கும் அற்புதத்தினைப் பின் வருஞ் செய்யுள் காட்டும்.

பல்லவி.

சொல்ல வல்லாயோ ?—கிளியே
சொல்ல நீ வல்லாயோ ?

அநுபல்லவி.

வல்ல வேல் முருகன்—தனையிங்கு
வந்து கலந்து மகிழ்ந்துகு லாவென்று (சொல்ல)

சரணங்கள்.

க. தில்லை யம்ப லத்தே—நடனம்
செய்யு மமரர் பிரான்—அவன்
செல்வத் திரு மகனை—இங்குவந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடு வாயென்று (சொல்ல)

உ. அல்லிக் குளத் தருகே—ஒருநாள்
அந்திப் பொழு தினிலே—அங்கோர்
முல்லைச் செடி யதன்பாற்—செய்தவினை
முற்று மறந்திடக் கற்றதென் னேயென்று (சொல்ல)

௩. பாலை வனத் திடையே—தனைக்கை
பற்றி நடக் கையிலே—தன்கை
வேலின் மிசை யாணை—வைத்துச்சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தைசெய் வாயென்று (சொல்ல)

பிராஞ்சிஸ் தாம்சன் (Francis Thompson) என்னும் ஆங்கிலக் கவிஞர் இம மழை வீழ்ச்சி (To The Snow Flake) யைக் குறித்தியற்றிய ஓரழகிய செய்யுளிலே எல் (L) என்னும் ஆங்கில லகரம் சிறப்புற அமைந்து நிற்றலைக் காணலாம்.

கவி வல்லாரது உள்ளத்தி லமைந்த நல் லிலக்கண மானது வல்லா ரல்லாரது உள்ளத்திலும் அமைதல் கூடுமன்றோ? ஆங்கதற்குச் சான்று வேறிடத்தில் யான் தேட வேண்டியதில்லை. இவ் வாராய்ச்சி செய்தற்குப் பதினைந்து யாண்டுகளின் முன்னரே யான் எழுதி, ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் என்னும் பத்திரிகையில் வெளியிட்ட ஒரு செய்யுளை ஈண்டுத் தருகின்றேன். பக்தி ரசத்தினது மென்னீர்மை யாகிய இயக்கத்தினை லகர வெழுத்துத் தந்து நிற்றலை இச் செய்யுளுள்ளும் காணலாம்.

ஈசனுவக்கும் மலர்

க. வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடி யிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

உ. காப்பவிழ்ந்த தாமரையோ
கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளேயாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ ?
காப்பவிழ்ந்த மலருமல்லக்
கழுநீர்த் தொடையுமல்லக்
கூப்பியகைக் காந்தளடி
கோமகனர் வேண்டுவது.

ங. பாட்டளிசேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறுதவர்க்கு
வாய்த்த மலரெதுவோ ?
பாட்டளிசேர் கொன்றையல்லப்
பாரிலில்லாப் பூவுமல்ல
காட்டவிழி நெய்தலடி
காயகனர் வேண்டுவது.

கம்பரும் உடல் வனப்பும்

திரு. T. K. சிதம்பரநாத முதலியார்
திருச்சிராப்பள்ளியில் வானொலியிற் பேசியது

உலகத்தில் அழகுள்ள உயிர்கள் எத்தனையோ இருக்கின்றன. பறவைகளில், மயிலும் ஐந்நிறக் கிளியும் எவ்வளவோ அழகு வாய்ந்தன. விலங்குகளில், மான், சிறுத்தை போன்றவை மிக்க அழகு வாய்ந்தன. இவை போக, அரபியர்களைக் கேட்டால், குதிரைதான் எல்லா விலங்குகளையும்விட அழகு வாய்ந்தது என்று சொல்வார்கள். அரபியர்களுடைய பாதி உடல் குதிரைதானே. நம்மைக் கேட்டாலோ, நம் மனத்தைக் கவரும் அழகுள்ளது காளைதான் என்று சொல்வோம். காளையின் கொம்புகள், இருண்ட கண், நடக்கும்போது குழைந்து ஆடுகின்ற திமில், குஞ்சத்தோடு கூடிய வால், கண்ணுக்கு மையிட்ட மாதிரி நிறம் வைத்த மேனி, எல்லாம் நம்மவருக்கு அருமையான அழகுதான். பார்க்கப் பார்க்கச் சலிக்காத அழகு. இந்த உணர்ச்சியே கோயிலில் நந்தியையும், மதிள்கள் மேலும், பூசை மணி மேலும், காளையையும் ஏற்றி அமைத்திருக்கிறது.

ஆனாலும், உண்மையில் நம்முடைய கண்ணுக்கு உயிர்கள் எல்லாவற்றிலும் அழகு வாய்ந்தது மனிதத் தோற்றமே. ஆண், பெண், குழந்தைகள், போன்ற அழகுள்ள வேறு உருவத்தை மனிதனுடைய கண் பார்க்க முடியாது.

கம்பர் மக்களின் உடல் வனப்பை எப்படி எல்லாமோ பார்த்துப் பாராட்டி யிருக்கிறார். **கும்பகர்ணன்** முதலானவர்களுடைய பருத்து உயர்ந்த கருமேனியைக் கண்டு களிக்கிறவர் அவர். **தாடகையைப்** புகழும்போது அவளுடைய அச்சந்தரும் வடிவத்தைப் பாராட்டிய மாதிரி **அரம்பை** முதலியோர் உருவத்தைத் தான் அவர் பாராட்டியிருப்பரா? உண்மையான காவியக் கண்ணுக்கு வல்லமை வாய்ந்தவைகளெல்லாம் அழகுடையனவாகவே தோன்றும்.

இனி, வல்லமையோடு உயர்ந்த மனப்பண்பும் சேர்ந்து விட்டால், அந்த உடலுக்கு உண்டாகிற அழகு நிரம்பவும் மாற்று உயர்ந்ததாய்ப் போய்விடுகிறது.

இராமர் இலக்குமணர் இருவரும் உயர்ந்த உடற்பண்பும், உள்ளப் பண்பும் வாய்ந்தவர்கள். பொதுவாக உலகத்தில் அத்தகைய இரண்டு பண்புகளும் ஒத்தபடி வாய்ந்தவர்கள் குறைவு. எக்காலத்திலும் குறைவுதான். கம்பர் இவற்றை யெல்லாம் நன்றாய்க் கண்டு களித்தவர். தன்னுடைய குறிக் கோளை இது சார்பாக வெளியிடுவதற்கு, இராம இலக்குமணர் களை ஒரு மலையின் உச்சியில் நிறுத்துகிறார். அவர்களுடைய உயர்ந்த குணங்களை யெல்லாம் அநுமன் வாயிலாகச் செவி யாறக் கேட்ட சுக்கிரீவன் அவர்களைப் பார்க்க வருகிறான். வரு கிற வழியில் ஏதோ மறைத்திருந்த மரத்தையோ பாறை யையோ கடந்து திரும்பிய மாத்திரத்தில், இராம இலக்குமணர் களுடைய உருவத்தைத் திடீரென்று காண்கின்றான். திடுக் கிட்டுப்போகிறான். பிறகு நெடு நேரம் அவர்களைப் பார்த்த வண்ணமாய் நிற்கிறான். நான்முகன் படைப்பில், இப்படியும் உண்டா என்று ஒரே வியப்பில் மூழ்கிறான். அவர்களுடைய உருவத்தைப் பார்த்து மக்கள் என்றே எண்ண முடியவில்லை. தேவர் களுக்கும் மேலான தேவர் தாமே மக்களாகத் தோன்றி யிருக்கிறார்கள் என்று உறுதி கொள்கிறான்.

"தேறினன், அமரர்க் கெல்லாம் தேவராம் தேவ ரன்றே
மாறியிப் பிறப்பில் வந்தார் மானுட ராகி மன்னோ"

வீரன் ஒருவன் வீரத் தன்மை படைத்த சிறந்த உரு வத்தைப் பார்த்துவிட்டால், அவனுக்கு வருகிற களிப்பை பொதுவாக எல்லா மக்களும் உணர முடியாது. இந்தக் களிப்பு பின்வரும் சுக்கிரீவன் மொழியில் எப்படி வருகிறது என்று பார்ப்போம்.

சிவபெருமான், நான்முகன் ஆகிய தேவர் குழாம் எல்லாம் சிறந்த உருவம் படைத்தவர்கள் என்று சொல்லுவது மரபுதான். ஆனால் இப்போது ஏற்பட்டு விட்டது என்ன?

"ஆறுகொள் சடிலத் தானும் அயனுமென் றிவர்களாதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தம்மா."

இது உண்மையான எண்ணத்தைக் காட்டுகிறது.

இனி, பெண்களுடைய அழகு தனி. கோடிக் கணக்கான ஆண்டுகளாகப் பெண்ணின் அழகு ஒரு தனித் தன்மையாக ஏற்கப்பெற்றுப் பாராட்டப்பட்டு வந்திருக்கிறது. அதை அழ கணங்கு என்று சொல்வது பொருத்தந் தான். இந்த அழ கணங்கு நெடுகிலும் அணிகளிலிருந்தும், காதில் அணிகிற குழை களிலிருந்தும் மின்னுகிற ஒளியோடு விளங்கி வந்திருக்கிறது. பெண்களின் பரந்த கரு விழிகளோடும், அவர்களுடைய குழைந்து நெகிழ்ந்த சாயல்களோடும் பழகி வந்திருக்கிறது. கூர்ந்து நோக்குவோமானல் இது ஏதோ உடலை விட்டுத் தனி யாய் உலவுகின்ற தன்மை என்றே சொல்லத் தோன்றும்; பூவின் மணம் பூவை விட்டுத் தனியாய் உலவுகிற மாதிரி. இதைக் குறித்துப் புலவர் சொல்லுகிற முறையைப் பார்க்கலாம்.

" இழைகளும் குழைகளும் மின்ன, முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய தெனினும் "

இப்படி யெல்லாம் பழகி இருந்தபோதிலும், சீதையின் அழகு என்றும் காணாத அழகாய்த் துலங்கிக்கொண்டிருந்த தால், அழகு என்று சொல்லப் பட்ட அந்த அழகணங்கிற்கு என்ன நேர்ந்தது என்பதைப் பாட்டிற் பார்க்கலாம்.

" இழைகளும் குழைகளும் மின்ன, முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய தெனினும், இப்பாவை தோன்றலால்
அழகெனும் அணியும்ஓர் அழகு பெற்றதே. "

களிப்பிலும், இன்பத்திலும், மணக் கோலத்திலும் நிகழ் கிற சீதையின் அழகை இப்போது பார்த்தோம். இனி, வேறொரு நிலையில் பார்ப்போம். இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போய் இலங்கையில் அசோக வனத்தில் சிறை வைத்து விடுகிறான். அவளை மணக்கப் பல நாளும் எவ் வளவோ முயல்கிறான். அவள் அவனைத் தூசியாகவே எண்ணி ஒவ்வொரு நாளும் ஓட்டி விடுகிறாள். இந்த நிலையில் அவளுடைய நெஞ்சம் ஒரே துன்பத்தில் ஊறிக் கிடக்கிறது. இராமர் வந்து தன்னை மீட்பார் என்ற நம்பிக்கை யற்ற நிலைமையில் இருக்

கிருள். உடலெல்லாம் மெலிவுற்று மனம் மாத்திரம் ஒரு அளவற்ற வல்லமை வாய்ந்ததா யிருக்கிறது. இந்த நிலையைத்தானே தவம் என்று சொல்ல வேண்டும். இப்படி இருக்கிற **சீதையை** **அநுமன்** வந்து பார்க்கிருன். இந்தத் தவக்கோலத்தில் ஒரு ஒளி அதாவது ஒரு அழகு விளங்குவதைப் பார்த்து வியக்கிருன்.

சீதையினுடைய வியப்பான பண்புகளை வைத்தே பெண் தன்மை ஆண் தன்மையை விட எவ்வளவோ சிறந்துவிட்டது. பெரிய குடியில் பிறந்தவர்களிடத்தில் சிறந்த பண்புகள் உண்டு. அவையும் **சீதையை** வைத்தே உயர்ந்துவிட்டன. குடிப் பிறப்பாகிய அணங்கு சீதையை எடுத்து வளர்க்கப் பேறுபெற்றது. கணவனிடத்து வைத்துள்ள கடவுட் காதலும் அதோடு ஒட்டிய நாணமும் எவ்வளவு வியக்கத் தக்கவா யிருக்கின்றனவென்று **அநுமன்** எண்ணுகிருன்.

" பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால். "

சீதை ஒருத்தி தோன்றியதால் பெண்மை, குடிப்பிறப்பு, நாணம் எல்லாம் உயர்ந்து விட்டன. இனி, இவளுடைய அருந் தவத்திலிருந்து உண்டாகிற கடவுட் டன்மை நிரம்பிய அழகையெல்லாம் கண்டு துய்ப்பதற்கு **இராமன்** இங்கில்லையே யென்று மேலும் வருந்துகிருன்.

" பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக் கண்களே.''

மாதர்களுடைய உருவத்தின் அழகை இன்பக் கண்ணடி மூலமாகவும், துன்பக் கண்ணடி மூலமாகவும் பார்க்கிருேம். ஒரு புனிதவதியின் துன்பத்தின் மூலமாகப் பார்க்கிற அழகு மிகச் சிறந்ததென்று **கம்பர்** நமக்கு விளக்குகிருர்.

நமது சங்கத்தின் விரிவுரைக் கூட்டமொன்று தமிழ்ப் பெருமன்றத்தில், விக்கிரம, ஆனி, ௩௨ (16—6—40) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. சிதம்பரம் வித்துவான் திரு. மு. சடகோப ராமாநுசம்பிள்ளை அவர்கள் நம்மாழ்வார் என்பது பொருளாக, ஆழ்வாரது வரலாறு, கொள்கை, கல்விச்சிறப்பு, நூற் கருத்துக்களின் பொலிவு முதலியவற்றை விளக்கி அருமையும் இனிமையும் சிறக்கப் பேசினார்கள்.

௨ ௨ ௨ ௨ ௨ ௨

நன்கொடைகள்.

புலவர் கல்லூரி

	ரூ.	அ.	பை
திரு. M. முத்துராமன் செட்டியார் அவர்கள் (நச்சாந்துப்பட்டி.)	2	0	0
,, S. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் வழி ஒரு ரூபாச் சீட்டுகளின் வரவு	25	0	0
,, J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் வழி :—			
,, T. S. சிவகடாட்சம் பிள்ளை ,, சென்னை	2	0	0
,, U. N. காளிமருதை பிள்ளை ,, திருப்பூர்	2	0	0

பொது

,, S. குமரசாமி மேற்கொண்டார் அவர்கள் (கூனம்பட்டி.)	0	2	0
,, R. பழநித்துரை பிள்ளை ,, திருவாலம்பொழில்.	0	2	0

கல்லூரி

,, அ. நே. அ. ஜினகுமார முதலியார் ,, கரந்தை	0	8	0

மருத்துவசாலை

,, K. தியாகராசப் பிள்ளை அவர்கள், பம்பாய்	10	0	0

சுவடி மதிப்பு.

ஒப்பியன் மொழிநூல்: முதன் மடலம்-திராவிடம், முதற் பாகம்-தமிழ், ஆசிரியர்: பண்டித புலவ வித்துவ கீழ் கலைத் தேர்ச்சியாளர் திரு. ஞா. தேவநேசன். 1940. விலை ரூ 3. 1940 செப்டம்பர் முடியக் குறைந்த விலை ரூ 1-8-0.

ஒப்பியன் மொழிநூல் என்னும் இச் சிறந்த அருமையான நூலை யாம் மிக்க உவகையுடனும் பெருமிதத்துடனும் வரவேற்கின்றோம். இத்தகைய நூலொன்றை வெளிக்கொணர வேண்டுமென்பது எம் பேரவாவா யிருந்தது. எம் முயற்சியின்றி இந் நூல் வெளிவந்தது எதிர்பாராத பெருமகிழ்ச்சியை எமக் குண்டாக்கிற்று. திரு. தேவநேசப் பாவாணர்க்கு யாம் எத்தகைய நன்றி பாராட்ட வல்லேம்?

இந்நூல் தக்க வேளையில் வெளிவந்தது. இது, வடமொழியாளர் தாம் சொல்வனவே விதிமுறை என்று திட்டப்படுத்தும் காலம்; அம் முறைகளையே தமிழர் தம் ஆராய்ச்சித் துறைகளில் கைக்கொண் டுரைக்குங்கால், அவற்றுக்கு மாறான முறைகளால் வடமொழியாளர் மறுத்துரைக்கும் பிறழ்ச்சிக் காலம்; இத்தகைய வடமொழியாளரே அறிவுடையரெனும் திரிபுணர்ச்சி மிகுந்த காலம்; சிறிது வடமொழி கற்ற வளவிலே முற்றுங் கற்றுவிட்டதாகச் செருக்குற்றுத் தலைமயக்கங் கொண்டு குதிக்கும் தமிழர் பலர் விளங்கும் காலம்; தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே பிழைத்தும், நன்றி மறந்தும், தாய்மொழிப் பற்றிலராயும், வடமொழி யாக்கமே தேடி, இலக்கணத்தையுங் கைநெகிழ விட்டுத் தமிழ் முறைக்கு மாறாகக் கட்டுரையும் உரைநடையும் புனைந்துரைக்கும் வடமொழியாளர் மலிந்து பெருகும் காலம்; இத்தகைய கொடுங் காலத்தில் திரு. தேவநேசப் பாவாணர் செய்துள்ள உதவி ஞாலத்தின் மாணப் பெரிது. அவர்மாட்டு என்னாற்றுங் கொல்லோ தமிழுலகு?

வடமொழியாளர்கொள்கைகளையெல்லாம் பிய்த்தெறிந்து, தமிழ்மொழி முதல் முதன்மையுடைத்தென்றும், அது ஒப்புயர்வில்லாத் தனிமொழியென்றும், தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் வடமொழியும் வடமொழியாளரும் கடப்பாடுடையரென்றும் திரு. பாவாணர் தம் நூலில் நிலைநாட்டியுள்ளார்.

தமிழ்மக்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்ளும் ஒவ்வொருவர் கையிலும் இந்த ஒப்பியன் மொழிநூல் சுவடி இருக்க வேண்டும். அவர்கள் அதனைப் பன்முறையும் ஊன்றிப் படிக்க வேண்டும். அதிற்கண்ட கருத்துக்களை மனதிற்பதிக்கவேண்டும். நம் தண்டமிழ்த் தாய்மொழியை இழித்துரைக்கும் எவரையும் திரு. பாவணர் உதவிகொண்டு வாயடக்கித் தமிழ் மக்கள் தம் தாய்மொழிப் பற்றினை நிலைநாட்ட வேண்டும்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.